PAFFREL

# - 2023 -
# செப்ரெம்பர் மாத அரசியல் பகுப்பாய்வு

## நிறைவேற்று சுருக்கம

மார்ச் மாதத்திலிருந்து தொடர்ச்சியாகப் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தலை நடாத்துவதில்லையென தொடர்ச்சியாக அரசாங்கம் தனது தீர்மானத்தை உறுதி செய்து வருகின்றது. இதனால் எதிர்வரும் தேர்தல்களுக்கும் இதே நிலைமை ஏற்படுமென என்று முற்கூட்டியே சிலர் கவலை தெரிவித்துள்ளனர். ஆயினும், அடுத்த வருடம் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காக அரசாங்கம் தற்காலிக வரவு செலவுத் திட்டத்தில் 11 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. அத்துடன், அரசாங்கம் இரண்டு சர்ச்சைக்குரிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் அரசியல் கருத்துத் தெரிவிப்பு மற்றும் பொதுமக்களின் எதிர்ப்புக்களின் மீது அதிக கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு விரும்புகின்றது. உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியாக பலர், பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் ஆகிய இரண்டு சட்டங்களும் மக்களின் சுதந்திரத்தை கடுமையாகக் கட்டுப்படுத்தும் எனவும், நாட்டின் ஜனநாயகம் மற்றும் சட்டவாட்சியில் எதிர்மயமான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் நம்புகின்றனர். இச்சட்டங்கள் மீளப்பெறப்பட வேண்டுமென வலியுறுத்திக் கூறி வருகின்றனர். பொருளாதார வளர்ச்சி இன்னுமே எதிர்மறையாக இருப்பதாலும், விலைகள் அதிகரித்து வருகின்றமையாலும், மக்கள் போராட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கும் அபாயம் உள்ளது. மேலும், வலிதுடமையாக்கப்படுகின்ற சட்டங்கள் இவ்வாறான எதிர்ப்புக்களைக் குறிவைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணைப்பணத்தைப் பெற இயலாமல் போனமை எமது நாட்டு பொருளாதாரத்தின் நிச்சயமற்ற நிலை தொடர்பான முன்னெச்சரிக்கை ஆகும். கடந்த காலாண்டில் பொருளாதார வளர்ச்சி வீதம் நூற்றுக்கு மூன்று வீத மறைப் பெறுமானத்தில் இருந்ததன் காரணமாக இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் இதுவரை உறுதியான மட்டத்துக்கு வரவில்லை என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. விஷேடமாக அரசின் வருமான ஈட்டலில் ஏற்படும் பற்றாக்குறை காரணமாக வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறையை குறைத்தல் தொடர்பாக அரசாங்கம் தனக்கு வழங்கப்பட்டுள்ள பொருளாதார இலக்குகளை அடைய முடியாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. நிறைவேற்ற வேண்டிய சர்வதேச நாணயத்தின் தேவைப்பாடுகளான ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள் தொடர்பான தகவல்கள் இணைய தளங்களில் வெளியிடுதல், வரிவிலக்கு மற்றும் நன்மைகளை பெறுவோர் தொடர்பான தகவல்களை வழங்குவதில் அசராங்கம் தோல்விடைந்தமை பொருளாதார மறுசீரமைப்புக்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு தொடர்பான நம்பிக்கை இழப்புக்கு ஏதுவாகியுள்ளது. இருந்த போதிலும், ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை அமுல்படுத்த காலமெடுக்கும். ஊழல் எதிர்ப்பு சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் அரசாங்கம் எதிர்பார்க்கும் பெறுபேறுகளை அடைவதற்கு மேலும் ஒரு ஆண்டு தேவை என ஜனாதிபதி தெரிவித்துள்ள அதேவேளை, அந்த எதிர்பார்க்கும் இலக்குகளை அடைவதற்கு ஏறத்தாள இரண்டு ஆண்டுகள் செல்லலாம் என கருதலாம்.

அரச சார்பற்ற துறையின் தற்போதைய வளர்ச்சி தொடர்பாக விளக்கிச் சொல்லும், பெப்ரல் உள்ளிட்ட சிவில் சமூக அமைப்புகளின் கூட்டமைப்பினால் தயாரிக்கப்பட்ட சிவில் சமூக ஆளுகை தொடர்பான பகுப்பாய்வு அறிக்கையில் "தற்போது வளர்ச்சி அடையும் பொருளாதார அநீதி தொடர்பான உணர்வு பொருளாதார காரணிகளால் ஊக்குவிக்கப்பட்டுள்ளது" என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பொருளாதார மறுசீரமைப்பின் தாக்கம் சமச்சீரற்ற வகையில் சமூகத்தில் உள்ள வறிய மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது என்பது பொதுவான கருத்தாகும். பொறுப்பின்மை காரணமாக அரசாங்கத்தின் நட்டத்தை சமூகமயப்படுத்தி, இலாபத்தை தனியார்மயப்படுத்தி வருவதாக சிவில் சமூக ஆளுகை தொடர்பான பகுப்பாய்வு அறிக்கைக்கு பெரும் பங்களிப்பு செய்த ஏநசவைந சுநளநயசஉா நிறுவனத்தைச் சேர்ந்த நிஷான் டி சில்வா சுட்டிக்காட்டுகிறார்.

அரசாங்கத்தின் அதிகாரம் உள்ளவர்கள் இன மற்றும் மத ரீதியில் கூரணர்வுமிக்க பிரச்சினைகள் உதாசீனப்படுத்துவதனை நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புகள் தொடர்ச்சியாக வெளிப்படுத்துவதன் மூலம் சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு பலவீனமான மட்டத்தில் இருப்பது வெளிப்படுகிறது. அந்த நீதிமன்ற தீர்ப்புகள் மற்றும் உத்தரவுகள் பாராளுமன்றத்திலும், பாராளுமன்றத்துக்கு வெளியிலும் அவதூறுபடுத்தும் கூற்றுக்களுக்கு உட்பட்டுள்ளன. பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற சிறப்புரிமைகளைப் பாவித்து நீதிமன்றத்தின் பெயரைக் குறிப்பிடுதல் அடங்கலாக நீதிமன்றத்தை பகிரங்கமாக விமர்சித்தமை காரணமாக ஏற்பட்ட அச்சுறுத்தல் மற்றும் தாக்கம் காரணமாக சர்ச்சைக்குரிய குருந்திமலை (குரிந்தி விஹாரை) வழக்கின் தீர்ப்பை வழங்கிய முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி திரு. சரவணராஜா தனது பதவியை இராஜிநாமா செய்தது மட்டுமன்றி, நாட்டைவிட்டும் தப்பியோடி இருந்தார். ஐக்கிய இராச்சியத்தின் சனல் 4 ஒளிபரப்பிய ஆவணத் திரைப்படம் மூலம் 2019 ஏப்ரல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரத்தை மீள நினைவூட்டிவது உள்நாட்டு விசாரணை மற்றும் உண்மையை கண்டறியும் செயன்முறையின் நம்பகத்தன்மை தொடர்பான சந்தேகத்தை முன்கொண்டு வந்துள்ளது. அரசாங்கம் அந்த குற்றச்சாட்டை நிராகரித்துள்ளதுடன், உண்மையை கண்டறியும் செயன்முறையில் சர்வதேச தலையீட்டின் தேவையையும் நிராகரித்துள்ளது. தேசிய நல்லிணக்க பொறிமுறைகளின் நம்பகத்தன்மை தொடர்பில் அரசாங்கத்தின் பாதுகாப்பு அணுகுமுறை மற்றும் உள்நாட்டு விசாரணைகள் மீண்டும் மீண்டும் தோல்வியடைவதனை பொறுப்பேற்க எவரும் இல்லாத நிலை காரணமாக சர்வதேச தலையீடுக்கு ஏதுவாக அமைவதாக கூறபட்டுள்ளது.

## எதிர்கால தேர்தல்கள் தொடர்பான பிரச்சினை

மிகவும் குறைந்த வருமான மட்டம் மற்றும் தாக்குப்பிடிக்கும் இயலுமை மிகவும் குறைவாக உள்ள இந்த நேரத்தில் பொருளாதார நன்னிலை அடைதல், பொருளாதார வளர்ச்சி மற்றும் உறுதிப்பாட்டுக்கான பயணத்தைப் புறந்தள்ளி தேர்தல் நடத்துதல் தொடர்பில் கவனம் செலுத்தினால் அது தற்போதுள்ள நிலமையை விடவும் மோசமான நிலைக்கு நாட்டை தள்ளிவிடும் என முன்னாள் மத்திய வங்கி ஆளுனர் இந்திரஜித் குமாரசாமி தெரிவித்ததாக தகவல் வெளிவந்தது. நாடு தற்போது மேற்கொண்டுவரும் சர்வதேச நாணய நிதிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அடையப்பட்டுள்ள முன்னேற்றத்தை திருப்புவதற்கு இலங்கையின் தேர்தல் நாட்காட்டி வரலாற்றில் மறக்க முடியாத காரணியாக மாறும் எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சித்திட்டத்தைப் பாதுகாப்பதற்காக தேர்தல் கைவிடப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் கூற்றுக்கள் ஊடாகவும் தெரியவருகிறது. சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திய உடன்படிக்கைக்கு முன்பே தேர்தலை நடத்துவதனை விடவும் பொருளாதார நன்னிலையடைதல் தொடர்பில் கவனம் செலுத்துவதாக தெரிவித்து அரசாங்கம் இந்த ஆண்டு மார்ச் மாதம் இடம்பெறவிருந்த உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைத்திருந்தது.
இருந்த போதிலும், அடுத்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் நடைபெற வேண்டிய ஜனாதிபதி தேர்தலுக்காக அரசாங்கம் அடுத்த ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவில் 11 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளது. அரசாங்கம் அந்த தேர்தலை நடத்தவிருப்பதாக கருதுவதற்கான ஒரு சாதகமான அறிகுறியாகும். 2024 ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவு 3860 பில்லியன்

ரூபாவாகும் என்பதுடன், அதில் 11 பில்லியன் என்பது சிறிய தொகையாகும். எவ்வாறு இருப்பினும் 2023 ஆண்டுக்கான வரவுசெலவு திட்ட முன்மொழிவு 3657 பில்லிய ரூபாவாக இருந்த அதேவேளை, உள்ளூராட்சி தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபா தேவையாக இருந்தது. அது அந்த வரவுசெலவு திட்டத்தில் சிறிய தொகை மட்டுமே ஆகும். இருப்பினும் அந்த தேர்தல் நடத்தப்படவில்லை என்பதுடன், அந்த பணத்தை தேர்தலை விடவும் முக்கியமான அபிவிருத்தி தேவைகளுக்காக செலவிட்டதாக அரசாங்கம் வாதிட்டது. அதற்கு மேலதிகமாக தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதன் காரணமாக உள்ளூராட்சி தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஆலோசனைக் குழு ஏகமனதாக தீர்மானித்ததன் மூலம் உள்ளூராட்சி தேர்தல் இப்போது இரத்து செய்யப்பட்டுள்ளது.

விஷேடமாக நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானம் தொடர்பில் கவலையடைவதாக பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் திரு. ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார். அவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்வதனால் ஏற்படும் நிதி நட்டத்துக்கு யார் பொறுப்பு கூறுவது என திரு. ஹெட்டியாராச்சி கேள்வி எழுப்புகிறார். தற்போதைய நிலையில் கூட உள்ளூராட்சி தேர்தலை விரைவாக நடத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை அவர் குறிப்பிட்டார். மேலும், 2023 உள்ளூராட்சி தேர்தல் தயார்படுத்தலுக்காக இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே கணிசமான நிதியை செலவிட்டுள்ளது எனவும் ஹெட்டியாராச்சி அவர்கள் குறிப்பிட்டார். எனவே, வேட்புமனுக்களை இரத்து செய்வதன் காரணமாக ஏற்படக்கூடிய வருமான இழப்பில் அது தாக்கம் செலுத்தும் என்பது மட்டுமன்றி, ஏற்கனவே தேர்தலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள வளங்கள் விரயமாகும். உள்ளூராட்சி தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களை இரத்து செய்வதென மேற்கொள்ளப்பட்ட ஏகமனதான தீர்மானம் காரணமாக ஒரு பில்லியனுக்கு கூடுதலான நிதியிழப்பு ஏற்படலாம். உள்ளூராட்சி தேர்தலுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவு 9.3 பில்லியன் ரூபா ஆகும் என கணக்கிடப்பட்டிருந்தது எனவும் அவர் குறிப்பிடுகிறார்.

## ஜனநாயக விரோத சட்டங்கள்

அரசியல் கட்சிகள், சிவில் சமூகம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் குழுக்களின் எதிர்பை கருத்தில் கொள்ளாமல் ஒன்றுகூடும் மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரத்தை மட்டுப்படுத்தும் சட்டத்தை கொண்டுவரும் திட்டத்தை முன்னெடுக்க அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளதாக தெரிகிறது. பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைபு மற்றும் நிகழ்நிலை முறைமைகளின் பாதுகாப்பு தொடர்பான சட்ட வரைபு போன்றவை பொது மக்களின் சுதந்திரம் மற்றும் சுயாதீனத்தில் கடுமையாக தாக்கம் செலுத்துவதாகவும், அது நாட்டின் ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சியில் கடுமையான தாக்கம் செலுத்துவதாகவும் தெரிவித்து அவற்றை நீக்குமாறு சட்டத்தரணிகள் சங்கம் அரசாங்கத்தை கோருகிறது. இந்த இரண்டு சட்டங்களும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் அரசாங்கம் தவறான பாதையில் பயணிக்கும் போதுகூட அதனை சவாலுக்கு உட்படுத்தவது மேலும் சிரமமான விடயமாக இருக்கும்.

பயங்கரவாத தடுப்பு சட்டம் மறுசீரமைப்பதற்கான உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைபு விரிவான விடயப்பரப்பைக் கொண்டதாகும் என்பதுடன், அதன் மூலம் பொது மக்களின் எதிர்ப்பு அல்லது தொழிற்சங்க செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களை கைது செய்வதற்கான அதிகாரம் அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. "பொது மக்களை பயமுறுத்துதல் அல்லது பொது மக்களின் ஒரு பகுதியினரை பயமுறுத்துதல்" ("intimidating the public or a section of the public") என குற்றம் சாட்டப்படும் ஒருவரை இந்த சட்டத்தின் கீழ் கைது செய்யலாம். சட்ட வரைபின் 3 ஆவது பிரிவில் வரையறையன்றி பயங்கரவாதம் தளர்வாக வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது. தற்போது அமுலிலுள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் 2 ஆவது பிரிவில் தண்டனைச் சட்டக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள தவறுகள் தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்டுள்ள தவறுகள், அதாவது சட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ள 'குறிப்பிட்ட நபர்' மற்றும் 'சாட்சியாளர்களை' மரணமடையச் செய்தல், அடித்தல் போன்றவை குற்றவியல் அச்சுறுத்தல் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சாட்சியாளர்களை

கடத்திச் செல்லுதல் அல்லது அரச சொத்துக்களை கொள்ளையிடுதல் அல்லது முறைகேடுகள், ஆயுதம் அல்லது துப்பாக்கி தோட்டாக்களை சட்டவிரோதமாக இறக்குமதி செய்தல், பயங்கரவாத தடுப்பு சட்டத்தில் உள்ளடங்கும் தவறிழைத்தவர்களுக்கு பாதுகாப்பு வழங்குதல் போன்றவை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் அடங்கும். 3 (1) பிரிவின் பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைபில் எந்தவொரு "சட்டவிரோத" செயலும் 'பயங்கரவாதம்' என வரையறுக்கப்பட்டுள்ளது. தெளிவின்றி "எந்தவொரு செயல்" அல்லது "சட்டவிரோத தவறிழைத்தல்" வரை அது பரந்து செல்கிறது. மேலும், பயங்கரவாத தடுப்பு சட்டத்தைப் போலன்றி, பயங்கரவாத எதிர்ப்பு சட்டவரைபின் 3 (1) (அ) பிரிவு மிகவும் விரிவாக இருப்பதுடன், "எந்தவொரு நிச்சயிக்கப்பட்ட நபர் அல்லது சாட்சியாளருக்கு இழைக்கப்படும் குற்றவியல் அச்சுறுத்தல்" எனும் வாக்கிய தொகுதி நீக்கப்பட்டு, அதற்கு மாற்றீடாக "பொது மக்களை அச்சுறுத்துதல்" எனும் வாக்கிய தொகுதி உள்ளடக்கப்பட்டு தேவையற்ற வகையிலும், தெளிவின்றியும் விரிவாக வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக எதிர்ப்பு பேரணி தொடர்பில் வரைவிலக்கணம் செய்யப்படாத காரணத்தினால் தமது விவசாயத்துக்கான உரத்தை கோரும் விவசாயிகளின் சட்டபூர்வமான எதிர்ப்புக்கான பேரணியை 'பொது மக்களின் ஒரு பகுதியினரை அச்சுறுத்துதல்' என தெரிவிப்பதன் மூலம் 3 (2) பிரிவின் கீழ் எதிர்ப்பு பேரணியில் ஈடுபடும் தலைவர்களை கைது செய்வதன் மூலம் முடிவுறுத்தலாம்.

அத்துடன் நிகழ்நிலை முறைமைகளின் பாதுகாப்பு தொடர்பான சட்ட வரைபில் கருத்து வெளியிடும் சுதந்திரத்துக்கு பங்கம் ஏற்படுத்தும் பிரிவுகள் அடங்கியுள்ளன. இலங்கை பத்திரிகை நிறுவனம் மற்றும் **(SLPI)** அதனோடு இணைந்த அமைப்புகள் உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் தமது கவலையை வெளியிட்டுள்ள அதேவேளை, ஜனாதிபதியினால் நேரடியாக உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படும் மிகவும் பலமான நிகழ்நிலை முறைமைகளின் பாதுகாப்பை முறைமைப்படுத்தும் ஆணைக்குழுவை நிறுவும் செயற்பாடுகள் தொடர்பிலும் விஷேட கவனத்தை செலுத்தியுள்ளன. உத்தேச சட்ட வரைபு "விடயங்களை வெளிப்படுத்துதல்" போன்ற விரிவான மற்றும் தெளிவற்ற பொருள்கோடல்களை உள்ளடக்கியுள்ளதுடன், அவற்றுக்கான வரைவிலக்கணங்களை யார் தீர்மானிப்பது என்பது தொடர்பான விடயம் தெளிவின்றி உள்ளது. மேலும், நிறைவேற்று ஜனாதிபதியால் நியமனம் செய்யப்படும் நிகழ்நிலை முறைமைகளின் பாதுகாப்பு தொடர்பான ஆணைக்குழு கொண்டுள்ள அறிவித்தல் வெளியிடும் அதிகாரம் மற்றும் 'பொய்யான' வெளியிடுதல் பரவுதலை தடுப்பதற்கான அதிகாரம் போன்ற அதிகாரங்கள் உள்ளன. இந்த 'பொய்யான கூற்றுகள்' எனும் சொற்பதத்தை தவறாக பாவித்தல் மற்றும் அதன் பொருள்கோடல் தொடர்பான அக்கறையை ஏற்படுத்துகிறது. இந்த சட்டத்தின் மூலம் ஊடக சுதந்திரத்தில் தாக்கம் செலுத்தக்கூடிய வகையிலான தொந்தரவுக்கு உள்ளாக்குதல் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய செய்திகளை அறிக்கையிடுதல் யாராவது ஒரு நபரை அச்சுறுத்துதல் என கருதப்பட்டு அந்த விடயங்களை தொடர்பாடல் செய்தல் ஒரு குற்றவியல் குற்றமாக கருதப்படும்.

## IMF நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தாமை தாமதத்துக்கான காரணமாகும்.

இரண்டாவது தவணைப் பணத்தை வழங்குதல் தொடர்பில் நிச்சயிக்கப்பட்ட காலப்பகுதி இல்லையென தெரிவித்து, தமது நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளை நாடு அடையாமை காரணமாக சர்வதேச நாணய நிதியம் நிதியத்தினால் இலங்கைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்ட 3 பில்லியன் டொலர் கடன்தொகையின் இரண்டாவது தவணைப்பணம் தாமதமடைவதாக சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணைப்பணத்தை பெறுவதில் அரசாங்கம் தோல்வியடைந்தமை பொருளாதார நிச்சயமற்ற தன்மையை வெளிப்படுத்தும் முன்னெச்சரிக்கையாகும். இலங்கையின் பொருளாதார நன்நிலை இதுவரை உறுதி செய்யப்படவில்லை எனவும் சர்வதேச நாணய நிதியம் தெரிவிக்கிறது. விஷேடமாக அரசாங்கத்தின் வருமான ஈட்டலில் ஏற்படக்கூடிய பற்றாக்குறை காரணமாக வரவுசெலவு திட்ட பற்றாக்குறையை குறைத்தல் தொடர்பில் அரசாங்கம் தமக்கு வழங்கியுள்ள பொருளாதார இலக்குகளை அடையவில்லை எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிறைவேற்ற வேண்டிய சர்வதேச நாணய நிதியத்தின் தேவைப்பாடான

ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகை செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை இணையத்தளத்தில் வெளியிடுதல், வரிவிலக்கு மற்றும் பயன் பெறுனர்கள் தொடர்பான தகவல்களை அரசாங்கம் வழங்கத் தவறியமை போன்ற காரணிகள் பொருளாதார மறுசீரமைப்புக்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு தொடர்பான நம்பிக்கை இழப்புக்கு ஏதுவாகியுள்ளது.

நியுயோர்க் நகரிலுள்ள ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை **(UNGA)** அமர்வுக்கு இணையாக **USAID** நிர்வாகி சமந்தா பவர் அம்மையாரைச் சந்தித்த ரணில் விக்கிரமசிங்ஹ அவர்கள் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதற்கு காலமெடுக்கும் என்பதனை உறுதிப்படுத்தியுள்ளார். முறையான பயிற்சி பெற்ற ஆளணியினரை ஆட்சேர்ப்பு செய்யும் செயன்முறையுடன் ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழு தற்போது சண்டையிட்டுக் கொண்டிருப்பதாக (உரசசநவெடல பசயீடைபெ) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹ குறிப்பிட்டிருந்தார். இந்த நிலையை கருத்திலெடுத்து, ஊழல் எதிர்ப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைவதற்கு மேலும் ஒரு ஆண்டு தேவை என எதிர்பார்க்கப்படுகிறது. இருந்த போதிலும், ஊழல் எதிர்ப்பு கொள்கையை அமுல்படுத்தவதற்கான செயன்முறையை தமது அரசாங்கத்தின் ஒட்டுமொத்த அரச பொறிமுறையும் முழுமையாக பின்பற்றுவதாக தெரிவித்த ஜனாதிபதி. அந்த செயற்பாடுகளை விரைவாக நிறைவு செய்வதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

இலங்கையின் உள்நாட்டுக் கடன் மறுசீராக்க **(DDO)** செயன்முறையால் உருவாகும் சுமையின் நியாயமான பகுதியை தாங்கிக்கொள்ளுமாறு தனியார் கடன் வழங்கியோர் மற்றும் பெரும் தனவந்தர்களிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அவர்கள் கோரிக்கை விடுத்தார். இந்த செல்வந்தர்களை கடன் மறுசீரமைப்பு சுமையிலிருந்து காப்பாற்றுவதற்காக அந்த சுமை முழுவதையும் உழைக்கும் மக்களின் தோள்களில் சுமத்தும் அரசாங்கத்தின் அழிவுக் கொள்கையை அவர் விமர்சித்தார். பொருளாதார ரீதியுலும் நிதிசார்ந்த சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக தேசத்தின் அனைத்து தரப்பினரும் பங்களிப்புச் செய்ய வேண்டிய தேவையை அவர் குறிப்பிட்டார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட வரிக் குறைப்புகள் காரணமாக வர்த்தக பிரிவினருக்கு இலாபம் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அவ்வாறான வரிக் குறைப்புகள் காரணமாக அரசாங்கத்துக்கு 8 தொடக்கம் 10 வீதமான கணிசமானளவு அரச வருமான நட்டம் ஏற்பட்டதாகவும் சஜித் பிரேமதாஸ அவர்கள் சுட்டிக்காட்டினார். சர்வதேச நாணய நிதியத்தின் **(IMF)** விதந்துரைகளை கண்களை மூடிக்கொண்டு பின்பற்றுதல் தொடர்பாகவும் சஜித் பிரேமதாஸ அவர்கள் கருத்து தெரிவித்ததுடன், சர்வதேச நாணய நிதியத்தின் பெக்கேஜ் இதனைவிடவும் சாதகமானதாக இருந்திருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்ட அவர் தாம் ஆட்சிக்கு வந்தவுடன் உடன்படிக்கை தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தடன் மீள கலந்துரையாடுவதாகவும் தெரிவித்தார்.

45 வீதமான இலங்கையர்கள் சர்வதேச நாணய நிதிய செயற்பாடுகளினால் எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதாரம் தவறான பாதையில் பயணிக்கும் என நம்புவதாக **Verite Research** நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட பொது மக்கள் கருத்துக்கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து இலங்கை முன்னெடுக்கும் செயற்திட்டங்களால் எதிர்காலத்தில் இலங்கையின் பொருளாதாரத்துக்கு நன்மை ஏற்படும் என 28 வீதமான மக்கள் மட்டுமே நம்புகின்றனர். தமது பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் போது மக்கள் எதிர்ப்புகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடலாம். சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு எட்டப்பட்டுள்ள பொருளாதார மறுசீரமைப்பு செயற்திட்டங்களின் செலவுகள் கூட மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள நிலையில் பல்வேறு அரசியல் கட்சிகள் பொருளாதார நெருக்கடிகளை சீர்செய்வதற்கு தமது வாக்குறுதிகளை வழங்குவதன் மூலம் தேர்தலுக்கான போட்டி அரசியல் விவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

சிவில் சமூகம் தொடர்பான மதிப்பீடு ஊழல் தொடர்பில் மட்டுமன்றி அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் பொருளாதார மறுசீரமைப்பு செயன்முறை தொடர்பான சமத்துவமின்மை தொடர்பிலும் இருண்ட எதிர்பார்ப்பை ஏற்படுத்துகிறது. பெப்ரல் உள்ளிட்ட சிவில் சமூக அமைப்புகளின்

கூட்டமைப்பினால் தயாரிக்கப்பட்ட இலங்கையின் ஊழல் எதிர்ப்பு சூழமைவு தொடர்பான சிவில் சமூக ஆளுகை தொடர்பான ஆய்வு அறிக்கை பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம அவர்களால் எழுதப்பட்டுள்ளது. "தற்போது விருத்தியடையும் பொருளாதார அநீதி தொடர்பான உணர்வு மேலும் தீவிரமடைந்துள்ளதுடன், பொருளாதார நெருக்கடியின் உத்தேச மறுசீரமைப்பு தொடர்பான சுமையின் எந்தவொரு பகுதியையும் சுமக்காமல், அது தொடர்பாக எந்தவொரு பொது மக்கள் கலந்துரையாடலும் அந்த நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்கள் மீதே மீண்டும் சுமத்தப்படுகிறது" என அந்த அறிக்கையில் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பகுப்பாய்வு அறிக்கை நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கான அடிப்படைக் காரணிகளை தீர்த்து வைப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள விரிவான ஆளுகை மறுசீரமைப்பு விதந்துரைகளையும் உள்ளடக்கியுள்ளது.

பூகோள, இன, மத மற்றும் கலாச்சாரம் போன்ற பல்வேறு பிரிவுகளை பிரதிநிதித்துவம் செய்யும் வகையிலான 250 பங்குபற்றுனர்களுக்கு கூடுதலானோரால் வழங்கப்பட்ட தகவல்கள் மூலம் இந்த அறிக்கை ஊட்டம் பெற்றுள்ளது. பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம அவர்கள் சிவில் சமூக முன்னெடுப்பு தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டார். இலங்கையில் பாவிக்கப்படும் உயர்ந்தளவு சாத்தியம் மற்றும் மிகை அச்சுறுத்தல் தந்திரோபாயங்களில் நாட்டின் வகைகூறல் சட்டகம் கட்டமைப்பு ரீதியில் பலவீனப்படுத்தப்படுதல், அரச அலுவலர்கள் மீதான அழுத்தம் மற்றும் தலையீடுகள், அரச தொழில்முயற்சிகளை தவறாக பாவித்தல், அரசாங்கத்தின் பெறுகை செயலொழுங்கு விதிகளின் செயற்பாடுகள், சிவில் சமூகம் மற்றும் சட்டவிரோத நிதி கொடுக்கல் வாங்கல்களை மூடிமறைத்தலாகும் என அந்த அறிக்கை வெளிப்படுத்தகிறது.

இலங்கையின் மறுசீரமைப்புகளில் முக்கியமான சமூக – அரசியல் சூழமைவை வெளிப்படுத்தும் இந்த ஒத்தழைப்பு முயற்சி ட்ரான்ஸ்பெரன்ஸி இன்ரர்நெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் (வுஐளுடு), ஏநசவைழ சுநளநயசஉாஇ மாற்றுக் கொள்கைகள் நிலையம் (ஊீயு), சர்வோதயம், மக்கள் மையம், சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (பெப்ரல்) தேசிய சமாதான பேரவை (ழேஊ) ஆகிய நிறுவனங்களை உள்ளடக்கிய அடிப்படைக் குழுவினால் நெறிப்படுத்தப்பட்டது. நாட்டில் ஆழமாக வேரூன்றியுள்ள ஊழல்களால் மாசடைந்துள்ள, நிர்வாக நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளதனை கூட்டாக புரிந்து கொண்டமையினால் "பொருளாதார நன்நிலைக்காக ஊழல் எதிர்ப்பு மறுசீரமைப்பு தொடர்பான முன்னெடுப்பு" எனும் இந்த முன்னெடுப்பை உருவாக்க அவர்கள் ஒன்றிணைந்தார்கள். நாம் உண்மையில் முன்னேற்றத்தை பெற விரும்பினால் நாம் இந்த பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்துதல் கட்டாயமானதாகும். 'இலங்கை தொடர்பான சிவில் சமூக ஆளுகை தொடர்பான ஆய்வு அறிக்கை' யின் உயர்மட்ட வெளியீடு செப்ரெம்பர் 13 ஆம் திகதி கொழும்பிலுள்ள டீஆஜஊர் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கொள்கை வகுப்பாளர்கள், சர்வதேச நாயண நிதிய (ஐஆகு) பிரதிநிதிகள், இராஜதந்திரிகள், சர்வதேச நிதி நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புகள், அறிஞர்கள் மற்றும் பல்வேறு துறைசார் பிரமுகர்கள் பங்குபற்றியிருந்தார்கள்.

## உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பாக மீளவும் ஆராய்ந்து பார்த்தல்

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலின் பின்னணி கதையை வெளிப்படுத்துவதாக தெரிவிக்கும் சனல் - 4 ஆவணத் திரைப்படம் வெளியிடப்பட்டதுடன் அந்த குற்றத்தின் பின்னணியில் இருந்தது யார்? ஏன்? என்பது தொடர்பாக நாட்டில் மீண்டும் விவாதம் ஆரம்பித்துள்ளது. ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசரின் தலைமையில் விசாரணைக் குழுவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹ நியமித்துள்ளார். தாக்குதலின் பின்னணியில் பெரும் மூளைசாலி ஒருவர் இருக்கிறார் எனும் முன்னாள் சட்ட மா அதிபரின் குற்றச்சாட்டை விசாரிப்பதற்காக பாராளுமன்ற தெரிவுக்குழுவை நியமிக்க எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹ தெரிவித்தார். அந்த இரண்டு விசாரணைகளும் நிறைவடைந்த பின்னர் அது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய இறுதித் தீர்மானத்தை மேற்கொள்வதற்காக அந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு படுகொலை தொடர்பில் சனல் - 4 அலைவரிசை சுமத்தும் குற்றச்சாட்டை விசாரணை செய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹ அவர்களால் முன்மொழியப்பட்டுள்ள விஷேட விசாரணை குழுவை கத்தொலிக்க பேரவை நிராகரித்துள்ளது. இவ்வாறான குழுக்கள் மூலம் உண்மை வெளிப்படும் என கத்தோலிக்க திருச்சபை நம்பவில்லை எனவும், காலம் மற்றும் பொது மக்களின் பணத்தை விரயமாக்கும் முயற்சியாகும் எனவும் கத்தோலிக்க திருச்சபையின் ஊடகப் பெச்சாளர் வணக்கத்தக்குரிய அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்தார். கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் மேலும் கருத்து தெரிவித்த அவர் அண்மையில் சனல் - 4 அலைவரிசை நிகழ்ச்சி தொடர்பில் நான்கு விடயங்களை கொண்ட முன்மொழிவை தாம் சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்தார். "முதலில் சனல் - 4 அலைவரிசையால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தொடர்பான விசாரணைகளின் கண்டறிதல்களின் அடிப்படையில் பக்கச்சார்பற்ற, சுயாதீனமான மற்றும் வெளிப்படைத்தன்மையான விசாரணையை உடனடியாக ஆரம்பிக்குமாறு கோருகிறோம். இரண்டாவதாக, அவ்வாறான விசாரணை சுயாதீனமான சர்வதேச நிபுணர் குழுவின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும். மூன்றாவதாக, வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தி விசாரணை நடத்துவதற்காக தேசிய நிபுணர் குழு நியமிக்கப்பட வேண்டும். நான்காவதாக, விசாரணை நிறைவடையும் வரை அனைத்து புலனாய்வு பிரிவுகள் மற்றும் உயர் பொலீஸ் அலுவலர்களின் சேவை உடனடியாக கைவிடப்பட வேண்டும்."

ஜனாதிபதி விக்கிரமசிங்ஹ அவர்களது அண்மைக்கால முன்மொழிவுகள், முன்னர் முயற்சிக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு சமமனானவையாக இருப்பதுடன், அவை வெற்றியடையவில்லை. தாக்குதலுக்கு பொறுப்பானவர்களை அடையாளம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்த தவறியமை மற்றும் முன்னைய உள்நாட்டு விசாரணைகளின் வகைகூறல் இன்மை போன்ற காரணிகள் தொடர்ச்சியாக சர்வதேச விசாரணையை கோருவதற்கு ஏதுவாக உள்ளது. இந்த விசாரணை கோரிக்கை காடினல் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையிலான கத்தொலிக்க திருச்சபை மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ங்களால் பிரதானமாக முன்வைக்கப்படுகிறது. சனல் - 4 வெளிப்படுத்தல் தொடர்பாக கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அவர்களும் சர்வதேச ஒத்துழைப்புடன் விசாரணை நடத்தப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார். ஈஸ்டர் தாக்குதல் உண்மையிலேயே பயங்கரவாத செயலா அல்லது ஆட்சியை பிடிப்பதற்கான தந்திரோபாய செயலா என்பதனை இறுதியாக தீர்மானிப்பதற்கான சந்தேகங்களை தீர்ப்பதற்கு நம்பகமான விசாரணை தேவை என அவர் தெரிவித்தார்.

## நீதிமன்றத்தை அவமதித்தல்

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மற்றும் மஜிஸ்ரேட் பதவி வகித்த, சர்ச்சைக்குரிய குருந்தூர்மலை விஹாரை வழக்கை விசாரணைக்கு தலைமை வகித்த ரி. சரவணராஜா திடீரென பதவியிலிருந்து இராஜிநாமா செய்தமை தொடர்பாக சட்டத்துடன் தொடர்படைய சமூகத்தில் பாரிய எதிர்ப்பலை தோன்றியுள்ளது. மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தான் பதவியிலிருந்த இராஜிநாமா செய்வதற்கான பிரதான காரணமாகும் என நீதிபதி சரவணராஜா குறிப்பிட்டிருந்தார். தனக்கு விடுக்கப்பட்டதாக சொல்லப்படும் அச்சுறுத்தல் தொடர்பாக பொலீஸ் அல்லது நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்காமல், அவர் இராஜிநாமா செய்தமை தொடர்பில் அவர்கள் கவலையடைந்தார்கள். 2023 செப்ரெம்பர் 23 ஆம் திகதியில் ஒரு கடிதத்தை நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பியதன் மூலம் சரவணராஜா மாவட்ட நீதிபதி, மஜிஸ்ரேட், குடும்ப நீதிமன்ற நீதிபதி, ஆரம்ப நீதிமன்ற நீதிபதி, சிறு உரித்துகள் நீதிமன்ற நீதிபதி மற்றும் சிறுவர் நீதிமன்ற நீதிபதி உள்ளிட்ட பல்வேறு நீதிமன்ற வகிபாகங்களிலிருந்து இராஜிநாமா செய்வதாக அறிவித்திருந்தார். அவர் நாட்டிலிரந்து வெளியேறி இந்தியாவுக்கு சென்றிருப்பார் என சமூக ஊடகங்கள் மற்றும் இணையத்தள அரங்குகளில் அறிக்கைகள் வெளிவருகின்றன. குருந்தூர்மலை விஹாரை சம்பவம் தொடர்பாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பாக அவர் இணையதள ஊடகவியலாளர்களை தெளிவுபடுத்தியதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

அரசாங்கத்தின் உறுப்பினர்கள் தேர்தல் செயன்முறைகள் தொடர்பான நீதிமன்ற தீர்ப்புகளை

கேள்விக்கு உட்படுத்துவதில் கூடுதலாக ஆர்வம் காட்டுதல் ஏனைய துறைகளில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது கவலைக்குரிய விடயமாகும். பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்குரிய பாராளுமன்ற சிறப்புரிமைகளை பாவித்து நீதிமன்றங்களை பகிரங்கமாக விமர்சிப்பதுடன், ஒவ்வொரு நீதிபதிகளின் பெயர்களைக்கூட குறிப்பிடுகின்றனர். தேசிய முக்கியத்துவம் மிக்க தேவைக்காக உண்மையை வெளிப்படுத்தவதற்காக மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை வலுவூட்டுதல் பாராளுமன்ற சிறப்புரிமைகளின் குறிக்கோள் ஆகும். அந்த அதிகாரத்தை மதிநுட்பத்துடனும், கவனமாகவும் பாவிக்க வேண்டும். குறிப்பாக நபர்களை அவமதிப்பதற்காக அல்லது தூற்றுவதற்காக அதனை பாவிக்கலாகாது. பாராளுமன்ற சிறப்புரிமை பாதுகாப்பை அனுபவிப்பவர்கள் அதனால் ஏற்படும் தாக்கங்களை இனங்கண்டு நடுநிலையாக பாவிக்க வேண்டும். அந்த சிறப்புரிமைகளை தவறாக பாவிப்பதனால் அந்த சிறப்புரிமையின் புகழுக்கு பங்கம் ஏற்படுவதுடன், அதனால் நிறைவேற்றப்படும் கட்டாயமான பணிப்பொறுப்பு தொடர்பான புரிதலை பலவீனப்படுத்தம்.

சில பாராளுமன்ற உறுப்பினர்களின் தரக்குறைவான நடத்தை இன மற்றும் மத முரண்பாடுகளுடன் தொடர்புடைய சர்ச்சைக்குரிய வழக்குகளில் தலைமை வகிக்கும் ஒரு நீதிபதி பதவியை இராஜிநாமா செய்து நாட்டைவிட்டு வெளியேற தீர்மானிக்கும் அளவுக்கு விருத்தியடைந்துள்ளது. அவ்வாறான வழக்குகளில் நீதிமன்றத்தினால் வழங்கப்படும் தீர்ப்புகளை அரச அதிகாரம் படைத்தவர்களால் உதாசீனப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிகிறது. நீதிமன்ற தீர்ப்புகள் மற்றும் உத்தரவுகள் பாராளுமன்றத்திலும், பொதுமக்கள் விவாதங்களிலும் அவமதிக்கும் வகையிலான வெறுக்கத்தக்க விமர்சனங்களுக்கு உட்பட்டுள்ளன. சர்ச்சைக்குரிய குருந்தூர்மலை (குருந்தி விஹாரை) வழக்கில் தலைமை வகித்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா பதவியிலிருந்து இராஜினாமா செய்தது மட்டுமன்றி, அவர் மீது விடுக்கப்பட்ட அழுத்தம் மற்றும் அச்சுறுத்தல் காரணமாக அவர் இலங்கையை விட்டு வெளியேறியதாக தெரியவருகிறது. தனக்கு உயிரச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக சமூக ஊடகங்களில் பகிரப்படும் கடிதத்தில் நீதிபதியால் நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு தெரிவிக்கப்பட்டதாக தெரிய வருகிறது. ஒரு ஜனநாயக நாட்டில் குறிப்பாக அச்சுறுத்தலுக்கு ஆளான நபர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு அரசுக்கும் மேலான நீதிமன்றத்திடம் மக்கள் இறைஞ்சி நிற்கும் நிலையில் நீதிமன்றங்களில் தோன்றும் இவ்வாறான அழுத்தங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்பது விவாதத்துக்கு அப்பாற்பட்ட விடயமாகும். இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் (டீயுளுடு) வெளியிட்டள்ள அறிக்கையில் நீதிமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக விடுக்கப்படும் எந்த வகையிலுமான அச்சுறுத்தல் அல்லது வன்முறையை வன்மையாக கண்டித்துள்ளது. முல்லைத்தீவு நீதிபதியின் இராஜிநாமா இலங்கையிலுள்ள நீதிமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பில் கடும் கவலையை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை செய்துள்ளது. எனவே, குறித்த சம்பவம் தொடர்பில் விரிவான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணையை ஆரம்பிக்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## நல்லிணக்க பொறிமுறைகள் சர்ச்சைகளை தோற்றுவிக்கின்றன

நல்லிணக்க அலுவலகம் எனும் பெயரில் ஒரு புதிய அரச நிறுவனம் உருவாக்கப்படவுள்ளது. வழக்கு தாக்கல் செய்வதிலிருந்து விடுபடும் சிறப்புரிமை மற்றும் அன்பளிப்பாக கிடைக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு நிதியை பெற்றுக்கொள்ளும் இயலுமை உள்ளிட்ட பரந்த வீச்செலை கொண்ட அதிகாரத்தை அந்த அலுவலகம் கொண்டிருக்கும். தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தக்கான உத்தேச அலுவலகத்தை அமைப்பதற்கான சட்ட வரைபு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் அந்த அலுவலகம் செயற்பட ஆரம்பிக்கும். நாட்டில் தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானத்தை உருவாக்குவதற்காக அரசு மற்றும் தொடர்புடைய அலுவலர்களுக்கு தேவையான விதந்துரைகளை சமர்ப்பித்தல், நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பான தேசிய கொள்கை மற்றும் தேசிய செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல் போன்ற அதிகாரத்தை அந்த அலுவலகம் கொண்டிருக்கும். அலுவலகத்தில் பணியாற்றும் எந்தவொரு நபருக்கும் தவறாக எதிர்ப்பு தெரிவித்தல் அல்லது கடமையை மேற்கொள்ள இடையூறு விளைவித்தல் அல்லது பொய்யான தகவல்களை வேண்டுமென்றே அலுவலகத்துக்கு சமர்ப்பித்தல் போன்றவை சட்ட வரைபுக்கு அமைய

அலுவலகத்தின் அதிகாரத்தை அவமதிக்கும் தவறாக கருதப்படும். பதினொரு உறுப்பினர்களை கொண்ட அந்த அலுவலகம் அமைச்சின் மேலதிக செயலாளரின் அதிகாரத்துக்கு குறையாத அதிகாரம் உள்ள ஒரு அங்கத்தவர் மற்றும் அமைச்சரின் விதந்துரையின் அடிப்படையில் மேலும் பத்து நபர்களை கொண்டதாகும். அனைத்து அங்கத்தவர்களும் ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட வேண்டும் என்பதுடன், அவர்களில் ஒருவர் விடயத்தக்கு பொறுப்பான அமைச்சரின் விதந்துரைக்கு அமைய தலைவராக நியமிக்கப்படுவார். அங்கத்தவர்கள் தொடர்ச்சியாக இரண்டு பதவிக்காலம் அல்லது வேறு வகையில் பணியாற்றலாம் என்பதுடன், ஒவ்வொரு பதவிக்காலமும் மூன்று வருடங்களாக வரையறுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்பு சபை மற்றும் ஹியூமன் றைட்ஸ் வோச் (ர்சுறு) உள்ளிட்ட ஒன்பது சர்வதேச மனித உரிமை அமைப்புகள் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை திட்டமிட்ட வகையில் உருவாக்குதல் தொடர்பாக தமது விமர்சனங்களை தெரிவித்துள்ளன. இந்த ஆணைக்குழு கடந்தகால மோதல்கள் தொடர்பான மீறல்களை தீர்த்து வைப்பதற்கான கருத்தை கொண்டுள்ளன. “உண்மை ஆணைக்குழுவுக்கான இலங்கையின் குறைபாடான திட்டம்” எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட அறிக்கை மூலம் இந்த அமைப்புகள் மோதலுடன் தொடர்புடைய துஸ்பிரயோகத்துக்கு உள்ளானோர் மற்றும் அவற்றால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களால் ஏற்கனவே எழுப்பப்பட்ட கவலைகள் போன்ற கவலைகள் இது தொடர்பிலும் வெளிப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. சொல்லப்பட்ட செயற்பாடுகளை இந்த ஆணைக்குழுவின் மூலம் வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு தேவையான நம்பகத்தன்மையை உருவாக்குதல் அல்லது பாதுகாப்பான சூழமைவை உருவாக்குவதற்கான உண்மையான முயற்சி மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். ஆணைக்குழுக்களின் தோல்வியடைந்த வரலாறுகள் தொடர்பாக குறிப்பிடப்பட்ட அந்த ஒருங்கிணைந்த அறிக்கையில் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்காக அரசு தற்போது முன்வைத்துள்ள யோசனைகள் தொடர்பிலும் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. கடந்தகால ஆணைக்குழுக்களின் தோல்விகளை கருத்திலெடுத்து இந்த புதிய ஆணைக்குழுவுக்கு உண்மை, நீதி மற்றும் இழப்பீட்டை வழங்குவதற்கான நாட்டம் மற்றும் இயலுமை உள்ளதா எனவும் அவர்கள் வினா எழுப்புகின்றனர்.

PAFFREL

**16**, Byrde Place, Off Pamankada Rd, Colombo 06, Sri Lanka.

**TEL**: el: 011 2 558 570/1   Fax: 011 2 558 572

**FAX**: 11 2 558 572

**Email**: paffrel@sltnet.lk

www.paffrel.lk